# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
# இந்திய வானிலைத் துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (29.05.2024 முதல் 02.06.2024)

**அறிக்கை எண் 043/2024** **தேதி.28.05.2024**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 40°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 31°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேரவெப்பநிலை 17°செ முதல் 21°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 13°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### கோயமுத்தூர் மாவட்டத்தின் கடந்தவார வானிலை

கோயமுத்தூர் மாவட்டத்தின் 24.05.24 முதல் 27.05.24 வரையிலும் பகல்நேரவெப்பநிலை 28°செ முதல் 33°செ ஆகவும் இரவுநேரவெப்பநிலை 23°C முதல் 25°C ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 91 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 66 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 17-24 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்குதிசையிலிருந்து தென் கிழக்கு திசைவரை பதிவானது.

### கோயமுத்தூர் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (24.05.2024 முதல் 27.05.2024) | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு 02.06.2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 24/05 | 25/05 | 26/05 | 27/05 | தேதி | நாள்-1 29/05 | நாள்-2 30/05 | நாள்-3 31/05 | நாள்-4 01/06 | நாள்-5 02/06 |
| 9.4 | 9.5 | 0.7 | 0.6 | மழை (மி.மீ) | 1 | 1 | 7 | 3 | 5 |
| 31 | 28 | 29 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 32 | 32 | 31 |
| 24 | 23 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 22 | 21 | 21 | 21 |
| 8 | 8 | 7 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 8 | 7 | 8 | 8 | 8 |
| 91 | 90 | 81 | 81 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 70 | 70 | 70 | 70 | 70 |
| 89 | 66 | 66 | 66 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 30 | 40 | 40 | 30 | 40 |
| 17 | 18 | 21 | 24 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 20 | 20 | 18 | 18 | 18 |
| 230 | 230 | 230 | 230 | காற்று வீசும் திசை | 250 | 250 | 250 | 250 | 250 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை கோயமுத்தூர் (29.05.2024 முதல் 02.06.2024)

வரும் நாட்களில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த 5 நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்சவெப்பநிலை 31°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்சவெப்பநிலை 21°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 30 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது.

திசையிலிருந்து வீசக்கூடும்.

| கோயமுத்தூர் மாவட்டத்தில் உள்ள தொகுதி வாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | ஆனைமலை | அன்னூர் | காரமடை | கிணத்துக்கடவு | மதுக்கரை | பெரியநாயக்கன்பாளையம் | பொள்ளாச்சிவடக்கு | பொள்ளாச்சிதெற்கு | சர்க்கார் சாமக்குளம் | சுல்தான்பேட் | சூலூர் | தொண்டாமுத்தூர் |
| **29-05-2024** | 2.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **30-05-2024** | 1.0 | 0.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 1.0 | 1.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 |
| **31-05-2024** | 6.0 | 6.0 | 6.0 | 5.0 | 5.0 | 5.0 | 6.0 | 6.0 | 5.0 | 6.0 | 6.0 | 5.0 |
| **01-06-2024** | 1.0 | 2.0 | 2.0 | 1.0 | 0.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 | 1.0 |
| **02-06-2024** | 5.0 | 3.0 | 4.0 | 4.0 | 3.0 | 3.0 | 5.0 | 5.0 | 3.0 | 3.0 | 3.0 | 3.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வரும் 5 நாட்களில் மேற்கு மண்டலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. காற்றின் வேகமானது மணிக்கு 10 - 26 கி.மீ வரை எதிர்பார்க்கப்படுகிறது. உள் மாவட்டங்களில் காற்றின் வேகமானது சற்று கூடுதலாக இருக்க வாய்ப்புள்ளது.<br>மண் ஈரத்தினை பொறுத்து இறவைப் பயிர்களுக்கு நீர்ப்பாசனத்தினை ஒத்திவைக்கவும். பயிர் கழிவு மூடாக்கு இடவும்.<br>நிலவும் வானிலையினைப் பயன்டுத்தி ஒத்திவைக்கப்பட்ட நீர்பாசனம், விதைப்பு, உரமிடல் மற்றும் மருந்து தெளிப்பினை தொடரலாம். |
| நெல் | விதைப்பு | நிலவும் வானிலையினைக் கருத்தில் கொண்டு குறுவைப் பருவத்திற்கான நெல் விதைப்பினைத் தொடரலாம். |
| கரும்பு | வளர்பருவம் | உள்ளூர் பகுதிகளில் அதிவேகக் காற்று மற்றும் லேசான மழை பொழிய வாய்ப்புள்ளது, எனவே கரும்பில் எதிரெதிர் வரிசைகளை விட்டம் கட்டி காற்றினால் சாயமல் பாதுகாக்கவும்.<br>மழை பெய்துள்ளதால் ஏற்பட்ட மண்ணின் ஈரப்பதத்தை கொண்டு வடிகால் வசதியுடன்பின் பருவ கரும்பு நடவை தொடர்ந்து மேற்கொள்ளவும். |
| பருத்தி | பூக்கும் பருவம் | கடந்த வார தொடர் மழையினால் பருத்தி பயிர் பாதிக்கப்பட்டிருந்தால் பூ உதிர்வை தடுத்து காய் பிடித்தலை |

| | | |
|---|---|---|
| | | மில்லி கிராமை ஒரு லிட்டர் தண்ணீரில்) கலந்து தெளிக்கவும். |

| | | |
|---|---|---|
| மஞ்சள் | நிலம் தயாரித்தல் | மழையினால் கிடைத்த மண் ஈரத்தினைப் பயன்படுத்தி வடிகால் வசதியுடன் தொடர்ந்து மஞ்சள் நடவு செய்யவும். |
| மரவள்ளி | அறுவடை | பெய்துள்ள மற்றும் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி மரவள்ளிக்கிழங்கு அறுவடை செய்யலாம். |
| வாழை | வளர்பருவம் | எதிர்பார்க்கப்படும் அதிவேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும். |
| தென்னை | | கோடை காலத்தில் பெறப்படும் மழையினை வேர் பகுதியல் சேமிக்கும் வகையில் மரத்தினை சுற்றிலும் பாத்திகளை உள்நோக்கி சாய்வாக ஆழப்படுத்தவும், |
| கால்நடைகள் | | கடந்தவார மழையில் முளைத்த புதிய புற்களை மேயவிடுவதை தவிர்ப்பதனால் கால்நடைகளில் குடற்புழுக்களின் தாக்கத்தினை தவிர்க்கலாம். |

## குறுஞ்செய்தி

- எதிர்பார்க்கப்படும் அதிவேக காற்றினை கருத்தில் கொண்டு 5 மாத வயதுடைய வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**முதன்மைஅலுவலர் (GKMS)**
**வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்**
**த.நா.வே.ப.கழகம், கோவை**